XVC
40

# வீரத்தமிழன் வ. உ. சிதம்பரம் பிள்ளை வில்லுப்பாட்டு

புலவர் ஜே. எம். விக்டோரியா

1966

ம:517

# அரங்கேற்றம்

## நடிகவேள் லடிஸ் வீரமணி குழுவினர்

6110

இடம்: கமலா மோடி மண்டபம்

காலம்: 28—9—1966

நேரம்: 5 மணி-மாலை

* 100

வெளியீடு:

**தமிழர் முன்னேற்றக் கலா மன்றம்**

இல. 67, கன்னாரத் தெரு

கொழும்பு 13.

உரிமை ஆசிரியனுக்கே.

# முகவுரை

அன்பர் ஆர். கே. சண்முகநாதன் அவர்களும் யானும் வழக்கம் போல் அந்த ஞாயிற்றுக்கிழமையும் கால்பேஸ் மைதானத்தில் அமர்ந்து உரையாடல் செய்து கொண்டிருந்தோம்.

அன்றைய தினத்து எங்கள் உரையாடலின் இறுதிப் பேச்சு தென்னாட்டு வீரத்தளபதி அமரர் வ. உ. சிதம்பரம் பிள்ளையைப்பற்றிய உரையாடலில் கொண்டு நிறுத்தியது.

தேசாபிமானிகள் பல தியாகங்களைச் செய்து பாரதத்தை அந்நியர் அடிமைத்தளையில் இருந்து விடுவித்தனர். அவர்களில் என்மனக் கோவிலில் முதன் முதல் குடி கொண்டவர் கறுத்தமேனியும் வெறுத்த உள்ளமும் பழுத்த தேச பக்தியும் கொண்ட வீரச்சிதம்பரனேயாவர்.

''உச்சிமீது வானிடிந்து வீழ்கின்ற போதிலும் அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே'' என்று பாரதி பாடுவதற்கு முன்னரே அத்தத்துவத்தை வாழ்க்கையில் கடைபிடித்தவர் வீரச்சிதம்பரனார்.

சிதம்பரனாரைப்பற்றிய எங்கள் உரையாடலின் போது சிதம்பரனாரின் சிறந்த பக்தரான ஈழத்துப் பிரபல நடிகர் அன்பர் லடிஸ் வீரமணி அவர்கள் எங்களுடன் கலந்துகொண்டார். அன்னார் தம் குழுவினரைக்கொண்டு ஈழத்தில் அரங்கேற்றம் செய்யச் சிதம்பரனார் சரித்திரத்தை வில்லுப்பாட்டாக அமைத்துத்தரும்படி கேட்டார்.

அன்பர் லடிஸ் வீரமணியவர்களின் உயரிய நோக்கில் உள்ளம் பூரித்து அன்பர் ஆர். கே. சண்முகநாதன் அவர்கள் எழுதும்படி என்னைத் தூண்டினார்கள். சரியென்று ஒப்புக் கொண்டேன். இந்தவிதமாக உருவாகியது இந்த வில்லுப் பாட்டு.

அழகிய தாமரையின் அருகேயுள்ள கொட்டியும் நாணம் இன்றி மலர்வதுண்டு. அஃதே போல் நரை படிந்த புலமை கொண்ட அறிஞர்கள் மத்தியில் வெட்கப்படாது சிதம்பரனார்

சரித்திரத்தை வில்லுப்பாட்டாக மலரச்செய்தேன். இதில் பல பிழைகள் பரவிக்கிடக்கலாம். அப்பிழைகளை அறிஞர்கள் திருத்தஞ் செய்துதந்து மேலும் எனக்கு ஊக்கத்தையும் உற்சாகத்தையும் ஊட்டுவார்களாக.

சிதம்பரனாரைப்பற்றிய நூல்கள் பல வெளிவந்துள்ளன. ஆனால் சிதம்பரனார் வில்லுப்பாட்டு இதுவரை வெளிவந்ததாகத் தெரியவில்லை. இச்சிறியபணியை சிறியேன் செய்யக்கிடைத்தமை மட்டற்ற மகிழ்ச்சியைத் தருகின்றது.

வில்லுப்பாட்டை எழுதி முடிப்பதற்கு ஆரம்பமுதல் இறுதிவரை எனக்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுத்து உதவியாய் நின்றவர் இலக்கிய வட்டத்தில் சுடர் ஒளியாக விளங்கும் அன்பர் ஆர். கே. சண்முகநாதன் அவர்களே.

வில்லுப்பாட்டு எழுதி முடிந்ததும் தேசாபிமானம் படைத்தவர்களான தென்னாட்டு முஸ்லீம் பெரியார் ஒருவரிடமும் கூட்டப்புளி ஸ்ரீ எல். ஏ. கோஸ்தா அவர்களிடமும் கொண்டு காண்பித்தேன். அதன்பின் மட்டுநகர் வித்துவான் உயர்திரு. F. X. C. நடராசா அவர்களிடம் கொண்டு சென்றேன். அன்னார் பார்வையிட்டு அச்சிட்டு அரங்கேற்றஞ் செய்யும்படி உளங்கனிந்த அன்புடன் கூறினார்கள். இப்பணியைத் தமிழர் முன்னேற்ற கலாமன்றத்தினர் பொறுப்பேற்றுக்கொண்டனர்.


எனது சிறிய பணியைத் தமிழகம் ஏற்றுக்கொள்ள உதவியும் ஒத்தாசையும் புரிந்த அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியைச் சமர்ப்பித்துக் கொள்ளுகிறேன்.

வணக்கம்

கொழும்பு.
28-9-1966

வாழ்க தமிழ்த்தாய்

**ஜே. எம். விக்டோரியா**



சிலம்புச் செல்வர்

## உயர் திரு ம. பொ. சி. அவர்களின்

# வாழ்த்துரை

புலவர் ஜே. எம். விக்டோரியா எழுதிய கப்பலோட்டிய தமிழன் "வில்லுப்பாட்டு" பார்வையிட்டேன். இதனை நடிகவேள் லடிஸ் வீரமணி நன்ருகப் பாடியதையும் கேட்டேன். இந்த இரு அன்பர்களுக்கும் எனது பாராட்டுக்கள். தேசபக்தி மணம் இலங்கையிலும் பரவ இந்தப் பணி மெத்தப்பயன்படும். வாழ்க அன்பர்களின் முயற்சி!

ம. பொ. சிவஞானம்

*6—8—1966.*
*கொழும்பு.*



# புறவுரை

வில்லுப்பாட்டு, விற்பாட்டு, வில்பாட்டு, வில்லடிப் பாட்டு என்று பாமரமக்களால் பேசப்பட்டுவரும் இந்த இசைப்பாடல்வகை, திருவுங் கல்வியுஞ் சிருந்தழைக்கும் ஈழ வளநாட்டிற்குப் புதியதொன்றாகும். உடுக்கைப்பாட்டு, சவனிக் கைப்பாட்டு என்ற பாடல்வகைகள் இலங்கையில் ஆதிகாலந் தொட்டுவழங்கிவருகின்றன. இலங்கைமணித் திருநாட்டில் வழங்கும் கலைகளும், கலாசாரங்களும், பாரம்பரியமும் பண் பாடும் என்றித்தகையனயாவும் பாரதப் பெருநாட்டின் தென் னகத் தமிழகத்திலிருந்து வந்தவையென்பது ஒருதலை. இவ் வண்ணம் அமைந்து கிடந்தும் கலை, கல்வி மிகுந்த இந்நாட் டில், வில்லுப்பாட்டு என்ற இந்த விருந்திற்பாணி இக்காலத் திலேதான் இங்குற்றுப் பெருவழக்குப் பெற்றுவருகின்றதெனி னும் இதன் வரலாறு, பாடும் முறை, இசைக்கும் பான்மை, பொருந்துமிசைக்கருவிகள், இவைபோன்ற நுணுக்கங்கள் அறிந்து அனுசரித்துப் பாடுவாரைக் கண்டோமல்லேம்.

கதிரினடியிற் பிணைக்கவேண்டிய சதங்கையை ஞாணிற் கட்டியும், வில்லோடு அணைத்துக்கட்டவேண்டிய குடத்தைத் தனியாகப்பிரித்து வைத்தடித்தும், வெண்கலக் கிண்கிணி பொருத்திய வீசுகோலுக்குப் பதிலாக வெறுந்தடியால் ஞாணின் மத்தியில் அடித்தும், உடுக்கையும் சல்லரித்தாளமுமின்றியும், தவறெல்லா வற்றிற்குஞ் சிகரம் வைத்தாற்போல் கதைதழு வியபாடலுமின்றி இங்கு வில்லடிப்பாருமுளர்.

வில்போன்ற இசைக்கருவியை ஒலிக்கச்செய்து கதை தழுவிப்பாடும் பாட்டே வில்லுப்பாட்டாகும். வில்போன்ற இசைக்கருவியும், கதைதழுவிய பாட்டுந்தான் இந்த விருந்திற் பாணிக்கு முதன்மையானவை.

வில்போன்ற இசைக் கருவியின் நுணுக்கங்களை முதலிலறிவோமாக. வில்லின் தண்டு கதிர் எனப்படும். இக்கதிரின் நீளம் 1½ பாகம்; அதாவது 6 முழம் — 9 அடி. இதன் அகலம் 3½-அங்குலம். வைரம் பாய்ந்த கூந்தற்பனை. அல்லது பனையின் சலாகையிற் செதுக்கிக் கதிர் செய்யப்படும். கதிரின் நுனி சிறுத்தும் நடு பெருத்து மிருத்தல் வேண்டும். வில்லை வளைக்கும் ஞாணின் நீளம் 4 முழமாக இருத்தல்வேண்டும். ஞாணில் மணிகட்டுவதில்லை. ஞாண் தோல் முறுக்காலமைந்த வடக்கயிருக இருத்தல் நலம்; கிடைக்காதபட்சத்தில் மாட்டு வடம் பாவிக்கலாம். கதிரினடியில் ஓடவிட்டிருக்கும் கம்பியில் எல்லாமாகப் பதின்மூன்று கிண்கிணிகள் கட்டிப்பொருத்தப் பட்டிருத்தல்வேண்டும். கதிரின் முனைகளிற் குமிழ்.

வில்லின் மத்தியில் கதிரோடு சேர்த்துக்குடங் கட்டப் படுதல் வேண்டும். கதிருங் குடத்தின் கழுத்தும் சேர்ந்தாற் போல் நூற்கயிற்ருன் கட்டுதல்வேண்டும். வில்லினை ஒருபால் உயர்த்தியும் மறுபால் பதித்துங் கட்டுதல்வேண்டும். உயர்ந்த பாகத்தில் 6 கிண்கிணியும் பதிந்தபாகத்தில் 7 கிண்கிணியும் அமைதல்வேண்டும். கிண்கிணிகளின் பருமன் தோடம்பழ அளவாக இருத்தல்வேண்டும். வெண்கல வார்ப்பாலானவை.

குடம் சாதாரணமானதல்ல. கழுத்து வளைந்திருக்கலாகாது. நிறுதிட்டமாக இருத்தல்வேண்டும். வைக்கோற்புரியாலான அடைமீது குடமிருத்தப்படுதல்வேண்டும், குடத்திற்குத் தகுந்தாற்போல தோலில் அல்லது கமுகம் பாளையில் தட்டு மட்டை செய்துகொள்ளுதல்வேண்டும்.

உடுக்கை வெண்கலத்தாலாயது. தோல் மாட்டுச் சவ்வால் அமைந்திருக்கும், ஒருபக்கத்தில் குதிரைவால் மயிர்கள் குறுக்கே கட்டப்பட்டிருக்கும்.

உருண்டவீசுகோல் ஒவ்வொன்றிலும் ஒவ்வோர் கிண் கிணி. நீளம் 1½ முழம்.

தாளத்தினைச் சிங்கிதாளம் என்பர், இதன் அடித்தாளம் இரும்பாலாயது. மேற்ருளம் வெண்கலத்தாலாயது. தாளத் திற்கிசையச் சப்பளாக்கட்டைகளும் தட்டப்படும்.

வில்லுக்கிசைய மேடைப்பந்தல்கட்டப்படுதல்வேண்டும். மேடைப்பந்தலின் பக்கக் காலுடன் வில்லின் உயர்ந்தபக்கமுனை சேர்த்துக்கட்டியிருக்கும். மறுபக்கம் பாடுபவரின் காற்பெரு விரலுடன் பிணைக்கப்பட்டிருக்கும்.

இவ்வாறமைந்துகிடக்கும் வில்லினை வீசுகோலால் அதன் மத்தியில் அடித்தல் சாலாக்கருமம். மத்தியில் அடித்துக்காட்டுவார் இதனை அறிந்துகொள்வார்களாக.

விற்பாட்டுக்காரராகிய கவிஞன் பாடும்போது வீசுகோல் வீசப்படமாட்டாது. வில்நாண் இயங்காது. ஏனையதாளவரிசைகள் அடங்கி ஒலிக்கும். புலவர்பாடிய பாடலை வாங்கித்தாள வரிசைக்காரர் சேர்ந்து பாடும்போது அவர்களின் கருவிகளாகிய குடம் உடுக்கை சல்லரி, சப்பளாக்கட்டை எல்லாஞ் சேர்ந்து நாதமெழுப்ப, வீசுகோல் தன் கைவரிசை காட்ட, கதிரிற்கட்டிய சதங்கைகள் சேர்ந்து இன்னோசை யூட்ட, நாதகீதம் காற்றில் மிதக்க வில்லுப்பாட்டு நடைபெறும்.

பல்வகை மெட்டுக்களும் தாளங்களும் கதைப்போக்கில் மாறி யெழுப்பப்படும்போது புத்தார்வம் மக்கள் மத்தியில் எழும்பும். இதனால் வில்லுப்பாட்டு விறுவிறுப்படைய மக்களும் இவ்வகைக்களியாட்டங்களில் ஆர்வமும் ஆசையுங்கொள்வர்.

வில்போன்ற இசைக்கருவியை இசைத்துக்கதை தழுவிய பாடலைப்படிப்பதே வில்லுப்பாட்டென்றும். இதுவரை வில் போன்ற இசைக்கருவியின் நுணுக்கங்களை எடுத்துரைத்தோம். இனி, கதைதழுவிய பாட்டுக்குவருவோமாக.

முத்துப்பட்டன், பார்வதியம்மன், சுடலைமாடன், தர்க்கராசன், மன்மதன்ரதி சனனகாண்டம், இசக்கி, நீலி, சங்கிலி, பூதத்தார், சாத்தன், முத்தாரம்மன், சின்னத்தம்பி என்ற நாமங்களையுடைய வில்லுப்பாட்டுகளைப்பற்றி நாம் அறிந்திருக்கின்றோம். முற்காலத்தில் கோயில்களிற் திருவிழாக் காலங்களிற் பாடப்பட்டுவந்தன. தற்காலத்தில் வானொலியில் இசைக்கப்படுகின்றன. கடைசியாகக் கண்ணகிகதையும் வில்லுப்பாட்டாகியிருக்கின்றது. அக்காலத்திற் சிறுதேவதைகளுக்கு ஊர் மக்கள் எடுக்கும் விழாக்களில் அத்தேவதைகளின் கதைகளைப் பாட்டிலிசைத்து வில்லுப்பாட்டுப்பாடினர். இவ்வகையில் போரில் இறந்தவீரர். உடன்கட்டை ஏறி மடிந்த மனைவியர் வரலாறுகளும், ஒருசில புராணக்கதைகளும் வில்லுப்பாட்டாக்கப்பட்டன. மக்களிடையே பயபத்தி, காதல், வீரம், பரோபகாரம். முதலிய நற்குணங்களை வளர்க்க வில்லுப்பாட்டு உதவியது. இக்காலத்தில் இதனை வசைபாடவும், இசைபாடவும். ஆசியம் ஊட்டவும் பயன்படுத்துகின்றனர். கலைதெரியாதார் இதற்கு உலைவைத்துவிட்டனர்.

இதுவரை வெளிவந்த வில்லுப்பாட்டுகளுள் முத்துப்பட்டன், பார்வதியம்மன் வில்லுப்பாட்டுகள் தலைசிறந்தவை யெனப் புலவர்போற்றுவர். முத்துப்பட்டன்கதை கலப்பு மணத்தை அடிப்படையாகவுடையது. முத்துப்பட்டன் என்பான் பிராமணன்,

''ஆரியநாடதிலே அழகுடைய பட்டமார்கள்.
அண்ணன் பட்டன் தம்பிபட்டன் அப்பாபட்டன்
குப்பாபட்டன்
சங்குப்பட்டன் சாவணப்பட்டன் தக்க
சோமலிங்கப்பட்டன்
எல்லாத்துக்இளையவனும் எந்தன் ஆரிய முத்துப்
பட்டன்.

இவன் தமையன்மாருடன் சண்டைசெய்து மாதாபிதாவை வெறுத்துப் பிறந்த ஊர்தனைக்கடந்து காட்டுவழி நடந்து சென்றபோது ஒருநாட்காலையில் நாலுவேத முறைப்படி பூசைபண்ணும் வேளையிலே,

பாவையர் இரண்டு பெண்கள் பெட்டியில் சோறுங் கொண்டு பூச்சிநாய்தனைப் பிடித்துப் பட்டணந் தன்னைவிட்டு பசுக்கிடைக்கேகும் நேரம்,

அப்பெண்களில் ஆசைகொண்டு அவர்கள் பின்செல்ல பெண்களிருவரும் தப்பியோடித்தந்தை பகடைக்கு முறையிட்டனர். அந்தமொழிகேட்டபகடை.

அஞ்சுமணி வல்லயமும் தடியுங் கொண்டு
வந்தவழிதனைத் தேடி நாய் பிடித்து
மாடறுக்கும் கத்தி கையிலெடுத்துக்கொண்டு
சிந்தைபொறிபோல் கலங்கிச் செருப்பு மாட்டி
செடிநுழைந்து குறுக்குவழி வாறநேரம்
அந்தணன் தான் கிடக்கிறதைப் பகடைகண்டு

அவனழகில் மயங்கி அவனை நித்திரையினின்றும் எழுப்ப முத்துப்பட்டன் எழும்பியாரென்று வினவப் பகடையுந் தான் சக்கிலியன் என்றும் பெண்களின் தந்தையென்றும் விடையிறுத்தனன். பின்னர் முத்துப்பட்டன் வேண்டுகோளின்படி பகடை தன் மக்களை வதுவைசெய்து கொடுத்தனன். மணமான அன்றிரவே மாடு பிடிச்சண்டையில் மாண்டுமடிந்தனன் முத்துப்பட்டன். இதுதான் முத்துப்பட்டன்கதை.

பார்வதியம்மன் வில்லுப்பாட்டு பரவர் குலத்துதித்த பார்வதியைச் சிவன் மணம்புரிய வந்த கதையை விரித்துக் கூறுவது.

இவ்வண்ணம் வளர்ந்து வந்த வில்லுப்பாட்டுக்கு மேலும் மெருகூட்டும் வண்ணத்தில் வ. உ. சிதம்பரம்பிள்ளை வில்லுப்பாட்டு அழகொழுக, நறுமணம்வீச, செந்தேன்தளையவிழ, வில்லவலோர் உளம்மகிழ, நற்றமிழ்மக்கள் மனங்குளிரத் தென்னகத்தே தாயகத்து உடன்குடியிற் புலவர் பரம்பரையிற் பிறந்து திருவளர் ஈழவள நாட்டில் இக்கலைவளர்ப்பான் விரும்பிய புலவர் J. M. விக்டோரியா அவர்களாற் பாடப்படலாயிற்று. புலவர் J. M. விக்டோரியா அவர்கள் புலவர்கள் குடும்பம் என்று போற்றப்படும் கோத்திரத்திலே அந்தோனிக்குட்டி அண்ணவியார் இன்பகவிராயர் தோன்றிய பரத குலத்துமரபிலே, குலசேகரன் பட்டினத்தை அடுத்தமணப்பாடு என்னும் பேரூரிலிருந்து பிரிந்து உடன்குடி சென்று வாழ்ந்த * விக்டோரியா குடியிற்பிறந்து கல்வி கற்றுத்தேறினவரெனினும் பிறப்பாலும் உரிமையாலும் பழக்கத்தாலும் புலவர். செந்தமிழ்ப்பாக்கள் பல பாடியுள்ளார். இந்நூலின் கடவுள் வாழ்த்துப்பாடல் புலவரின் பெருமையை எடுத்துக்காட்டுவதாக அமைந்துகிடக்கின்றது. பற்பல தாளமெட்டுக்களை வைத்து நூலை ஆக்கியுள்ளார். தாம் புகுந்த நாட்டிற்குப் பெருமையளிக்குமுகமாக.

பாரதி கண்ட மெய்ஞ்ஞானக் குருவெனப்
பார்புகழ் யாழ்ப்பாணச்சாமி பிறந்திட்ட
சீர்திகழ் ஈழத்து டன்கப்பல் வாணிபம்
செய்ய நினைத்தான் கொம்பேனிக்கெதிராக

என்று பாடி

ஈழவள நாட்டினையும் தமிழ் மணங்கமழும் யாழ்ப்பாணத்தையும் பெருமைப்படுத்தியுள்ளார்.

இவ்வாறு உயர்ந்த குறிக்கோளுடனும் சிறந்த கவித்துவப்பான்மையுடனும் பாடப்பெற்ற சிதம்பரனார் வில்லுப்பாட்டினை நடிகர்வேள் லடிஸ் வீரமணி அவர்கள் அதற்குரிய நுணுக்கங்களை அனுசரித்து வில்லடித்துப்பாட முன்வந்தமை

* பரசமய குஞ்சர பஞ்சானன சோடசாவதான அருளப்ப முதலியார் அவர்களைக்கொண்டு ''பரவர் புராணம்'' பாடுவித்த ஜோசப் சல்வதோர் விக்டோரியா பிதிர்வழியைச் சார்ந்தவர்.

பாராட்டுதற்குரியதாகும். இலங்கையிலே நாடகத்துறையில் எந்தப்பாத்திரத்தையும் ஏற்றுத்திறம்பட நடிக்கக்கூடிய ஆற்றல் வாய்ந்தவர். எந்த வேடத்தையுந் தாங்கக்கூடியவர் நாடகக்கலைஞராக விளங்குமிவர் கவிஞர்பெருமகனுர் சுதந்திரதாகம் ததும்பயாத்த வில்லுப்பாட்டினை இசைக்கருவியாகிய வில்லினில் அடித்துக்காட்டித் தமிழ்கூறும் நல்லுலகத்தின் புகழ்ச்சிக்குரியராவாரென்பதில் எள்ளிடையேனுஞ் சந்தேகமில்லை. இதுவே தமிழறிந்தார் முடிந்ததின் முடிபுமாகும்.

கப்பலோட்டிய தமிழன், சுதந்திரதாகம்மிக்க தமிழன், பாரதமாதா பெற்றெடுத்த திலகர்களில் தென்னகத்தனிப் பெருந் திலகராகவிளங்கிய வ. உ. சிதம்பரப்பிள்ளை அவர்கள் ஈழத்தில் வாழும் கவிஞரையுங் கலைஞரையும் மறை பொருளாகநின்று ஊக்குவித்து மேலும் தியாகசிந்தனையினையும் கன்னித்தமிழினையும் இந்த வில்லுப்பாட்டின் மூலம் வளர்த்துள்ளாரெனலாம்.

தமிழகத்திலே ஒருகாலத்தில் அருகிவந்த வில்லுப்பாட்டிற்குப் புத்துயிர் அளித்துப் புதுமை புகுத்திய பெருமை நாகர்கோயில் தோவாளை சுந்தரம்பிள்ளைக்கே உரியதெனலாம். அவரின் நற்றொண்டைப் பின்பற்றிக் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன், காளி என். இரத்தினம் இருவரும் போற்றி வளர்த்தனர். மக்கள் இலக்கியங்களிற் பெருங் கருத்துக்கொண்ட கொத்தமங்கலம் சுப்பு இன்றும் இதனை அங்கு வளர்க்கின்றார். இங்கும் நடிகவேள் லடிஸ் வீரமணி மேலும் பல வில்லுப்பாட்டு கலைப் புலவர் J. M. விக்டோரியா வழியாக இயற்றுவித்து வில்லுப்பாட்டு வீரமணியாகத் திகழ வேண்டும். அதன்மூலம் தண்டமிழ், வண்டமிழ், செந்தமிழ், தீந்தமிழ் வளர்வதாக என்று வாழ்த்தி, கவிஞருக்கும் கலைஞருக்கும் பாராட்டுகள் வழங்கி இந்தப் புறவுரையினை முடிக்கலாயிற்று.

F. X. C. நடராசா

53, மத்திய வீதி
மட்டக்களப்பு
28—9—66.

# நன்றியுரை

கப்பலோட்டிய தமிழன் வ. உ. சிதம்பரம் பிள்ளையின் 94-வது ஆண்டு பூர்த்தி விழாவைச் சிறப்புடன் கொண்டாடுவதற்குப் போதிய பண உதவி புரிந்த பெருங்குணம்படைத்த கனவான்களுக்கும் எனது ஆக்க வேலையில் ஊக்கம்காட்டிய அன்பர்களுக்கும் என் அன்புகனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

கடந்த இருபது ஆண்டுகளாக நாடகக் கலைக்குப் பணியாற்றிக் கொண்டு வருகிறேன். இப் பணியில் ஈடுபட்டுவரும் பொழுது சிறந்த தேச பக்தரும் அஞ்சா நெஞ்சம் படைத்தவரும் ஆள்வோருக்கு எதிரியும் தென்னாட்டுக்குத் தளபதியுமான வ. உ. சிதம்பரம் பிள்ளையின் வீர வரலாற்றை அறியலானேன். அறிந்ததில் இருந்து பிள்ளையவர்கள்பால் என் உள்ளத்தில் பக்தியேற்பட்டது.

அன்னார்மீது எனக்கேற்பட்ட பக்தியின் காரணமாக பல கூட்டங்கள் மூலமாகவும் ஓரங்க நாடகங்கள் மூலமாகவும் பிரச்சாரம் பண்ணிவந்தேன் என்றாலும் அன்னார்மீது கொண்டுள்ள எனது பக்தித் தாகம் தணியவில்லை.

தமிழினத்தின் தன்மானம்காத்த அவ் வீரத் தளபதியின் வரலாறு தமிழினத்து மக்களின் தசைநார்களிலே திளைத்து இரத்தத்தோடு இரண்டறக் கலக்கவேண்டும் என்ற பேராவல் கொண்டேன்; அதுவே என் கடமையாகக் கருதினேன். எனது எண்ணம் இனிதே நிறைவேற புலவர் ஜே. எம். விக்டோரியா அவர்களைக்கண்டு பிள்ளையவர்களின் சரித்திரத்தை வில்லுப் பாட்டாக இயற்றித் தரும்படிக் கேட்டேன். உள்ளங் கனிந்த அன்புடன் இயற்றித் தந்ததுடன் புத்தக வடிவில் வெளிவருவதற்கு உதவியாகவும் நின்றார்; எவ்வித கைமாறும் கருதாது எனது எண்ணத்தைப் பூர்த்திபண்ணித் தந்த புலவர் ஜே. எம், விக்டோரியா அவர்கட்கும் தமிழர் முன்னேற்றக் கலா மன்றத்தின் சார்பில் புத்தகம் வெளியிட முனைந்த எனது நல்ல முயற்சிக்கு ஆதரவுகொண்டு விளம்பரங்கள் தந்து உற்சாகமூட்டிய ஏனைய வர்த்தக ஸ்தாபன உரிமையாளர்கட்கும் வாழ்த்துரை

வழங்கிய சிலம்புச் செல்வர் ம. பொ. சி. அவர்கட்கும் தனது சொந்த அலுவல்களை ஒருபுறம் ஒதுக்கிவைத்துவிட்டு சிரமத்தைப் பொருட்படுத்தாது உள்ளன்புடன் இப் புத்தகத்தை அச்சுப் பிழையின்றித் திருத்தம் செய்து உதவியதுடன் மதிப்புரையும் தந்த உயர் திரு வித்துவான் F. X. C. நடராசா அவர்கட்கும் இப் புத்தகத்தைத் தக்க விதமாய் ஒழுங்குபடுத்தி நல்ல விதமாய் அச்சிட்டுத்தந்த ராஜா பிரஸ் லிமிட்டெட் உரிமையாளர் அவர்கட்கும் முழுமனச் சுத்தியாய் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இறுதியாய் தமிழன் எங்கெங்கு வாழ்கின்றானோ அங்கெல்லாம் சென்று கப்பலோட்டிய தமிழன் வ. உ. சிதம்பரம்பிள்ளையின் வீர வரலாற்றை வில்லிசைக் கச்சேரி மூலம் பிரச்சாரம் செய்ய வேண்டும் என்பதே என் அவா. இறைவன் என் அபிலாசையைப் பூர்த்தி பண்ணுவானாக.

வணக்கம்

**லடிஸ் வீரமணி**

தலைவர்

தமிழர் முன்னேற்றக் கலா மன்றம்

இல. 67, கன்னரத் தெரு,

கொழும்பு 13.

# கடவுள்வாழ்த்து

அறுசீர் விருத்தம்

ஆதியோ டந்த மில்லான்
அருட்பெருங் கொடையோன் எல்லா
வேதமும் முழங்கு கின்ற
வித்தகன் ஆழி சூழும்
பூதல மாந்தர் தம்மின்
புலன்வழிக் கியைந்த வாறு
சோதியாய் விளங்கும் வல்லோன்
துய்யதாள் வணக்கம் செய்வாம்.

இதம்பெறப் பார தத்தாய்
என்றுசெந் தமிழர் நாட்டில்
சுதந்திர வேட்கை பூண்டு
துன்பங்கள் பலவ டைந்த
சிதம்பரன் சரிதை வில்லுச்
சிந்துவாய்ப் பாட வெண்ணிப்
பதமதை வணங்க லுற்றேன்
பரமனே அருள்செய் வாயே.

# தமிழ்த்தாய் வணக்கம்

மன்னவர் முனிவர் மாந்தர்
வாழ்வினுக் குறிவை யூட்டிப்
பொன்வளர் பாண்டி நாட்டில்
புகழுடன் அமர்ந்து நாளும்
கன்னியாய்த் திகழுந் தாயே
கவினுயர் சிந்து பாட
இன்னருந் தமிழ்த்தேன் நாவில்
ஈந்தரங் கேற்றி வைப்பாய்.

## அவையடக்கம்

விண்மதி யொளியின் முன்னே
மின்மினி பறப்ப தைப்போல்
தண்ணருந் தமிழில் தேர்ந்த
தகைமைசேர் புலவர் முன்னே
பண்ணிசைத் தறிந்தி டாயான்
பாடுகின் றேனென் பாடல்
கண்ணுறும் பிழைபொ றுக்கக்
கைகூப்பித் தொழுகின் றேனே.

## பாண்டி நாடு

௧

தர்க்கராசன் வில்லுப்பாட்டு "கணபதியும் என்குருவும்"
என்றமெட்டிலும் பாடலாம்

அலைமுழங்கும் கடல்படிந்த—கடல்படிந்த
அணிவெண்முத்து கரையொதுங்கும்—கரையொதுங்கும்
கரையொதுங்கும் முத்தெடுத்து—முத்தெடுத்து
கவணில்வில்லில் வைத்துநாளும்—வைத்துநாளும்
இளைஞர்விண்ணில் புள்ளினத்தை—புள்ளினத்தை
எய்துவிளையாடிடுவர்—ஆடிடுவர்
வாரிக்கொண்டை பூமுடித்து—பூமுடித்து
மதிமுகத்தில் திலகமிட்டு—திலகமிட்டு
பாவையரம் முத்தெடுத்து—முத்தெடுத்து
பாண்டியிட்டு ஆடிடுவர்—ஆடிடுவர்.

## எடுப்பு

முடிபுனைந்த வேற்றுமன்னர்—வேற்றுமன்னர்
முத்தளந்து கொண்டுசெல்வர்—கொண்டுசெல்வர்
வான்முழங்கி நீர்பொழியும்—நீர்பொழியும்
வயலில்மூன்று பூவிளையும்—பூவிளையும்
நதிகள்யாவும் பெருகிவெள்ளம்—பெருகிவெள்ளம்
நாட்டைச்சுற்றி நலன்கள்செய்யும்—நலன்கள்செய்யும்

வரண்டபூமி சுரண்டிணுக்கால்—சுரண்டிணுக்கால்
மதுரமேவும் நீர்பெருகும்—நீர்பெருகும்
பவம்அறுத்து அருள்சுரக்கும்—அருள்சுரக்கும்
பரமன்கோவில் பரவிக்காணும்—பரவிக்காணும்
வானுயர்ந்த மாடகூடம்—மாடகூடம்
மாட்சியோடு எங்கும்காணும்—எங்கும்காணும்
வீணைநாதத் தேன்மணக்கும்—தேன்மணக்கும்
விளங்கும்மூன்று தமிழ்மணக்கும்—தமிழ்மணக்கும்
பல்வளமுந் தன்னகத்தில்—தன்னகத்தில்
பந்தனங்கொள் பாண்டிநாடு—பாண்டிநாடு
சிலம்பால்வந்த வினையிைலே—வினையிைலே
நேர்ந்ததீமை தனையுணர்ந்து—தனையுணர்ந்து
நீதிகண்டு உயிர்துறந்த—உயிர்துறந்த
நெடுஞ்செழியன் ஆண்டநாடு—ஆண்டநாடு
மீன்கொடியைத் தாங்கிப்பூவில்—தாங்கிப்பூவில்
வேந்தர்ஆண்ட பாண்டிநாடு—பாண்டிநாடு.

## ஓட்டப்பிடாரம்

———o———

(வில்லடிக்கும் கூட்டம் என்றமெட்டு)
(தர்க்கராசன் வில்லுப்பாட்டு "இப்படியாய் புவியாண்டு இருந்துவரும் நாளையிலே" என்றமெட்டிலும் பாடலாம்)

சீர்வளரும் பாண்டிநாட்டை—பாண்டிநாட்டை
சேர்ந்த நெல்லையம்பதிக்கு—அம்பதிக்கு
எட்டுக்கல்லுத் தூரத்திலே—தூரத்திலே
இலங்குகின்ற நன்னகரம்—நன்னகரம்
கட்டபொம்மன் வாழ்ந்துவந்த—வாழ்ந்துவந்த
காலத்திலே பொன்விளையும்—பொன்விளையும்
பட்டினமாய் விளங்கிவந்த—விளங்கிவந்த
பவிசுறும் ஓட்டப்பிடாரம்—ஓட்டப்பிடாரம்
ஊரினிலே கீர்த்திமிக்க—கீர்த்திமிக்க
உலகநாத பிள்ளையென்பான்—பிள்ளையென்பான்
பக்திமிகும் உத்தமியாள்—உத்தமியாள்
பைங்கொடி பராயியுடன்—பராயியுடன்
ஒன்றுபட்டு செய்தவத்தால்—செய்தவத்தால்
உதித்தமக்கள் ஏழ்வர்அதில்—ஏழ்வர்அதில்

## பிறப்பு

பார்வதியம்மன் வில்லுப்பாட்டு—"அப்பனுர் சொல்லைத் தப்பாமல்வேலவர்" என்றமெட்டில் பாடலாம்

எடுப்பு

ஆயிரத்தோடெண்ணூறெழுபத்திரண்
டாண்டு செப்டம்பர்மாதம் ஐந்தாம்தினம்
வியாழனன்று விமலனருளினுல்
மேன்மைமிக்க சிதம்பரன் தோன்றினுன்.

**வசனம்**

மக்களில் இரண்டாவதாகவும் ஆண்மக்
களில் தலைமகனுகவும்

## பாட்டு

(பார்வதியம்மன் வில்லுப்பாட்டு "மகரமீனைப் பிடித்துத் திரும்பினுர்" என்றமெட்டு)

செல்வமைந்தன் பிறந்தமகிழ்ச்சியால்
செங்கதலி கற்கண்டுவெல்லத்துடன்
கோடியாடையுஞ் சால்வையுஞ் சேலையும்
குழந்தைகட் கினிப் பாகியபண்டமும்
ஏழைகட் கன்னதானமுமாகவே
ஏகமோக்காளமாக வழங்கினுர்.

ஞாலம்போற்றிப் புகழுஞ்சிதம்பரன்
நாளொருவண்ணமாக வளர்கிறுன்
பைந்தமிழ்மகன் வீரச்சிதம்பரன்
பள்ளிக்குச்சென்று கல்விபயில்வதும்
உயிரைத்தாங்கித் திகழும்உடம்பிற்கு
ஊக்கமும் புதுத்தெம்பும்உண்டாகிட
பந்தடிப்பதும் பஸ்கியெடுப்பதும்
பாரக்குண்டுகள் தூக்கியெறிவதும்
சடுகுடுவிளையாடுவதும் கிளித்
தட்டுப்போட்டுச் சமராட்டம்கொள்வதும்

ஓங்கும்வேகத்துடன் ஓட்டம்செய்வதும்
ஓடிவந் துயரந்தாண்டிப்பாய்வதும்
கம்பெடுத்துச் சிலம்பம்பயில்வதும்
கத்தியீட்டி குறிவைத்தெறிவதும்
தம்மடக்கித் தலைகீழாய்நிற்பதும்
தண்ணீர்நீந்துவதும் இதுபோல்பல.

*

## எடுப்பு

அப்பியாசங்கள் செய்தசிதம்பரன்
ஆங்கிலந்தமிழ் கற்றுத்தெளிந்தபின்
சட்டக்கல்வியில் தேர்ச்சியுமாகியே
தந்தைபாட்டன் பரம்பரைபோலவே
மாட்சியோடர சாங்கமன்றத்திலே
வழக்கறிஞன்என வெளியாகியே
சொந்தவூரில் முதலில்வழுவின்றி
தொழில்புரிந்து செயக்கொடிநாட்டினன்.

## நீதிமன்றம்

—— ○ ——

### எண்சீர்விருத்தம்

உண்மையுள்ள வழக்குகளைக் கைக்கெ டுத்து
உரையாடிச் செயிப்பவனும் இலஞ்ச மாக
எண்ணரிய பொருள்வரினும் அதைவெ றுத்து
எளியவருக் கிலவசமாய்ப் பேசு வோனும்
சண்டையிட்டு வரும்வாதி பிரதி வாதி
சமாதான மாகிடச்செய் வோனும் ஆன
தண்டமிழன் சிதம்பரனும் அவனை யீன்ற
தந்தையும் தலத்திலொரு வழக்கிற் காக.

•

வாதிவக்கீல் பிரதிவாதி வக்கீல் என்றே
மன்றமிசை இருவருமே ஏறி நின்று
தாதையென்றோ தனயனென்றோ எண்ணம் இன்றித்
தன்கட்சி செயம்கொள்ளவேண்டும் என்னும்

சாதனையால் உணர்ச்சிவச மாகி அங்கு
சரமாரி யாகஅனல் பறக்கும் வண்ணம்
வாதிட்டு வார்த்தைகளால் தாக்கிப்பேசி
வழக்கதனை விளக்கமுற வுரைக்கலானார்

* * *

தந்தைமகன் எதிரெதிராய் வக்கீ லாகத்
தலம்ஏறி தர்க்கித்து வாது செய்யும்
இந்தவழக் கின்முடிவை அறிவ தற்காய்
எள்போட்டால் எண்ணெய்வடிந் தோடும் வண்ணம்
வந்துகுழு மியமக்கள் கூட்டம்நீதி
மன்றத்தை எதிர்பார்த்தவாறு உள்ளம்
சிந்தித்த படியேமுன் னேக்கிநிற்க
சிதம்பரனே வழக்கதனை செயிக்க லானான்.

* * *

தன்னைவென்ற மகனாற்றல் கண்டு ''தம்மிற்
றம்மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது'' என்பதாக
மாண்புமிக்க வள்ளுவனார் வாய்மலர்ந்து
சொன்னமொழிக் கொப்பாகத் தனதுமைந்தன்
தோன்றியதால் அகமகிழ்ந்து ஆனந்தத்தால்
அன்பொழுக ஆங்கவனை வாரிக்கட்டி
அணைத்தபடி தந்தையுமே முத்தமிட்டார்.

* * *

## பாட்டு

எடுத்துக்கொள்ளும் வழக்குகளில்வெற்றி
யீட்டிஏழைத் தொழிலாளர்க்கிவதால்
அடம்பிடித்ததிகாரச் செருக்குக்கொண்
டநர்த்தங்கள்பல செய்ததுடன்சிறை
படுத்திடவும் வெகுபிரயத்தனம்
பண்ணினார்வஞ்சகர் அந்தவஞ்சகர்
திடுக்கிடும்படியாகத் தினந்தோறும்
சிந்தையில்திடங் கொண்டெதிர்த்தேநின்று
செயல்களாற்றிய வீரச்சிதம்பரன்
திருமணத்திற் கறிகுறிகாணுதே.

* *

## திருமணம்

தெந்தி னா தெந்தி தெந்தின தெந்தின
தெந்தி னா தெந்தி தெந்தின தெந்தின
தெந்தி னா தெந்தி தெந்தின தெந்தின
தெந்தி னா தெந்தி னா தெந்தி னானே

அணிதிகழ் அரவிந்தம் மலர்ந்து
அழகுமேவுந் தடாகங்கள் சூழ்ந்து
கணிதசாத்திரப் பள்ளிகள் ஆர்ந்து
கவின்கொள் நந்தவனங்கள் நிறைந்து
மணியுறும்மாட மாளிகைசேர்ந்து
வணப்புநீடி வளங்கள்சிறந்து
வணிகம்ஓங்கிச் செழித்தினிதாய் மக்கள்
மாண்புடன்நிதம் வாழ்திருர்செந்தூர்.

வள்ளலானசுப்ர மண்யபிள்ளைதன்
மாதுடன்சேர்ந்து செய்ததவத்தால்பெண்
பிள்ளையாகப்பிறந்து தயைபொறை
பெட்பெழில்தெய்வ் பக்தியுடன் திரு
வள்ளுவன்புவிக் கீந்தகுறளதை
மாசறக்கற்று மாண்போடிலங்கிய
வள்ளிநாயகி தன்னை இல்லாளென
மன்றல்செய்துமனம் மகிழ்ந்தானே.

தையலாள்வள்ளி மாதுசிரோமணி
தாலிபூட்டிய பூமானே கண்கண்ட
தெய்வமாகக் கருதித்தினம்பதம்
தெண்டனிட்டுக் கடமைதவறாது
செய்வதோடெதிர் பாராவிதமாக
தேடிவீடு விருந்தினர்வந்தாலும்
ஐயம்இன்றி யக மகிழ்வாகவே
அன்னம் உண்ணப்படைத்திடும்நல்லாள்.

## வசனம்

இத்தகைய குணநலங்கள் வாய்ந்த வள்ளி நாயகியைத் துணைவியென மன்றல் செய்து

## வள்ளியம்மைபிரிவு

—— o ——

அறுசீர் விருத்தம்

ஆவியும் உடலும் போல
அன்பினால் இணைந்தொன் ருகித்
தேவரும் அதிச யிக்கச்
சிறப்புடன் வாழ்க்கை பூண்டு
பூவினில் ஆறு ஆண்டு
பூரண மாகு முன்னே
தேவியாம் வள்ளி யம்மை
திருபரன் பதம் சேர்ந்திட்டாள்.

* * *

## ம று ம ண ம்

—— o ——

எண்சீர் விருத்தம்

காதலியாள் புவிவிடுத்து மறைந்த தாலே
கண்கலங்கி யூணுறக்க மின்றி நித்தம்
வேதனையால் உடல்மெலிந்து ஊக்கம் குன்றி
விளங்கியநம் சிதம்பரனர் தனது தந்தை
ஓதியநல் லுரைமறுத்தி டாதுவள்ளி
உத்தமியாள் இனவழியில் அவள்போ லொத்த
மாதினள்மீ ளுட்சியெனும் அணங்கை மக்கள்
வாழ்த்தமன மிசைந்துமறு மணஞ்செய்தானே.

* * *

## பாட்டு

—— o ——

(பார்வதியம்மன் வில்லுப்பாட்டு "மகரமீனைப்
பிடித்துத் திரும்பினர்" என்றமெட்டு)

எவ்வுயிரையுந் தன்னுயிர் போலவே
எண்ணி அன்புடன் வாழ்ந்த சிதம்பரன்
சைவம் ஊறித்திளைத்த பரம்பரை
தன்னில் தோன்றிவளர்ந்த சிதம்பரன்
செந்தில் வாழும் குறத்தி மணாளனை

சிந்தையில்வைத் திறைஞ்சும் சிதம்பரன்
தீண்டிடாச்சாதி என்றொருசாதிநம்
தேசந்தன்னில் இருக்கப்படாதென்ற
காந்திமந்திரந் தன்னையனுதினம்
கருத்தில்வைத்தே யொதுக்கப்பட்டகுல
இனத்தில் தோன்றி இருவிழிபார்வையும்
இழந்த ராமையா தேசிகர் தம்மையும்
சாந்தம் மேவிட நந்தன் குலமென
சாற்றிய சகஜானந்தர் தம்மையும்
உடன்பிறந்த சகோதரர் போலெண்ணி
உள்ளம் பூரிக்கத் தன்னுடன்இல்லத்தில்
அமர்த்திவேற்றுமையின்றி சமம்பெற
அன்புடன் கூடிவாழ்ந்த சிதம்பரன்
சீர்பெறத்திகழுஞ் சென்னைமாநகர்
சென்றிருந்தபொழு தொருநாளங்கே
இராமகிருஷ்ண மடத்துக்ருஷ்ணானந்தர்
என்னுஞ்சாதுவைச் சந்தித்தபோதவர்.

* * *

## எடுப்பு

மக்களுக்குப் புரியும்நற்சேவையே
மகேஸ்வரனுக்குச் செய்யும்பணியென
எடுத்தித்மாய் இயம்பச்சிதம்பரன்
இதயம்தன்னில் பதிந்துசுடர்விட
கலக்கம்நீங்கிக் கனிந்துசிதம்பரன்
கைத்தொழில்வளர் சங்கம்அதனுடன்
தருமசங்கம்என இருசங்கத்தைத்
தகையுறக் கர்ம வீரச்சிதம்பரன்
அலைமுழங்கும் திருமந்திரத்தின்கண்
அமைத்ததோடு நில்லாதுசுதேசிய
நாவாய்ச் சங்கத்துடன் பலசங்கங்கள்
நாட்டுமக்கள் முன்னேற்றங்கருதியே
அமைத்திரவு பகலாய்ச்சிதம்பரன்
ஆர்வமோடயராது உழைத்திட்டான்.

*

## வசனம்

திருவளரும் சிதம்பரனார் மக்களுக்கு
தினந்தோறும் செய்துவரும் சேவைகண்டு

## பாட்டு

வந்தே மாதரம் வாழ்கசுதேசியம்
வள்ளல் எங்கள் சிதம்பரன்வாழ்கவே
என்றுவானைப் பிளக்கும்படியாக
எழுச்சிகொண்டெங்கும் மக்கள்முழங்கினர்

* *

## வசனம்

இந்தவிதமாகத் தாய்நாட்டின் விடுதலையிற்
கருத்துவைத்து சங்கங்கள் அமைத்துவரும்
காலந்தன்னில் இங்கிலிஷார் செய்யும்
கடல் வாணிபத்தை இந்தியரே இனிநடத்த
வேண்டும் என்று

## காலியாக் கப்பல்

## பாட்டு

தெந்தினா தின தெந்தின் தெந்தின
தெந்தினா தின தெந்தின னானே

*

நீள் கடல் மிசை கப்பல் செலுத்த
நினைத்தான் வீரச் சிதம்பரன் தானே

வங்காளத் தையி ரண்டாக—ஆக்கி
வைக்க வேண்டும் என்பதாக்—வெகு
கங்கணங் கட்டிச் சூதாக—வெள்ளை
கர்ஸன் துரைசெய்த சூழ்ச்சிக்கெதிராக
பாலரும் வாலரும் பாவையைப் பெற்றோரும்
பாவைய ருங்கிழ மானவ ருஞ்சேர்ந்து
சீலமுறுஞ் சொந்தத் தேசத்தைக் காத்திட
செய்தார் கிளர்ச்சி யப்போது சிதம்பரன் (நீள்)

*

வாணிபம் செய்து ஆதாயம்—பெற
வந்த வெள்ளைச் சமுதாயம்—உயர்
ஆணிப்பொன் இந்திய தேயம்—தன்னை
ஆளுவதற் கென்ன ஞாயம் எனச்சொல்லி
பாரத மெங்கும் விடுதலை நாதம்
பரவிய போது பெருமித மாக்கம்
வீரச் சிதம்பரன் தாயின் சுதந்திரம்
மேவி நின்றான் நாவாய்ச் சங்கப்பெயரினால் (நீள்)

பரதேசத் துணியொன்றாய்க் கூட்டி—சொக்கப்
பனைபோல எரியத் தீமூட்டி—நாட்டில்
அரசாட்சிக் கெதிர்ப்பினைக் காட்டி—உரை
ஆற்றிய தோடுநில் லாது சிதம்பரன்
பாரதி கண்டமெய்ஞ் ஞானக் குருவெனப்
பார்புகழ் யாழ்ப்பாணச் சாமி பிறந்திட்ட
சீர்திகழ் ஈழத்து டன்கப்பல் வாணிபம்
செய்யநினைத்தான் கொம்பேனிக்கெதிராக (நீள்)

முள்ளினை முள்ளதி னாலே—குத்திக்
கிள்ளி யெடுப்பது போலே—ஆளும்
வெள்ளை யரையினி மேலே—நாட்டை
விட்டு வெளியாக்க வேண்டுமென் றுலவர்
கொள்ளை யடிக்கும் கடல்வாணி பத்தைநாம்
கொண்டெதிர் வாணிபம் செய்ய வேண்டுமென
உள்ளத் தெழுந்த உணர்ச்சியி னால்சொந்த
ஊரைவிட் டேகப்பல் தேடிப் புறப்பட்டான் (நீள்)

கைத்தொழில் வர்த்தகத் தோடு—பல
கப்பல்வைத் தோட்டிய நாடு—இப்போ
தத்தனைக் கும்அவ கேடு—செய்த
ஆட்சி நிலைகெட்டு வீழ்ச்சியுறும்படி
கப்பலுடன் வருவேன் இல்லை யாகில்
கடலிற் பிணமாய் மிதப்பேன் என்றேஉரை
செப்பிய வீரச்சிதம்பரன் "க்ராலியா"
கப்பலுடன் வந்தான் மக்கள்மகிழ்ந்திட (நீள்)

ஏலேலோ ஏலேலோ—ஏலேலோ
ஏலேலோ ஏலேலோ—ஏலேலோ

▪

உத்தமர்கள் அவதரித்த—ஏலேலோ
உன்னதஞ்சேர் பாரதத்தின்—ஏலேலோ
நத்துமெழில் வாசல் என்றே—ஏலேலோ
ஞாலமெல்லாம் நவிலுகின்ற—ஏலேலோ
மெத்தவளமார்ந்திலங்கும் பட்டினம தான
மேன்மையுறும் பம்பாய்க்குச் செந்தமிழ்த் தாயின்
புத்திர சிகாமணி சிதம்பரச் செம்மல்
போயங்கு இந்திய தேசத்து மக்கள்
சொத்தாக வாங்கியபொற் ''காலியா'' கப்பல்
சூல்கொண்ட சங்கினங்கள் தவழ்கின்ற பாண்டி
முத்துக் குளித்துறைக் கடல்வந்து சேர
முகமலர்ந் தேமக்கள் வாழ்த்தலுற் றாரே—(ஏலே)

பாரதத்தின் மீது வெள்ளை—ஏலேலோ
பறங்கியர் செய் ஆட்சிதன்னை—ஏலேலோ
வேரறவே பிடுங்கிக் கட்டி—ஏலேலோ
வெளியில்தள்ள வெனக்கொ ணர்ந்த—ஏலேலோ
கப்பலதில் மின்சாரத் தீபங்க ளேற்றி
கமுகுகுலை வாழைகொடி தோரணங் கட்டி
ஒப்புடனே கதரா லிழைத்த வெழில்மிக்க
உயர்ந்தரகத் துப்பட்டா அணியமிசை சூட்டி
தப்புப்பறை மேளந் தவில் முரசு கொட்டி
சங்கீத மோடுகுழல் வாத்தியம் முழங்க
செப்பரிய விதமாக செயகோஷ மிட்டே
சிந்தைகளிந்தே மக்கள் வாழ்த்தலுற் றாரே (ஏலேலோ)

▪ ▪ ▪

படிகொணர்ந்தே முத்தளக்கும்—ஏலேலோ
பவிசுடைய திருமந்திரம்—ஏலேலோ
குடிபுகுந்த மக்க ளொன்றாய்—ஏலேலோ
குதுகலித்துக் கொடுத்தபெரும்—ஏலேலோ
பாரச் சரக்குகளைப் பக்குவமாய் ஏற்றி
பயணஞ்செய் வோர்களைநற் பட்சமுடன் ஏற்றி
நீரடியுழுந் தியநங் கூரத்தை ஏற்றி
நெறிகெட்ட வெள்ளையர்கண் டஞ்சும் படிக்கு

பாரிய நெடுங்கம்பத் துச்சாணிக் கொம்பில்
பாரதமா தாவின் மணிக்கொடியும் ஏற்றி
சீரிலகு ஈழத் துறைமுகமே நோக்கி
சிங்காரக் கப்பலைச் செலுத்தலுற் றாரே (ஏலே)

* * *

## வசனம்

ஈழத்தை நோக்கி ஏகும் காலியாக்கப்பல்

* * *

## பாட்டு

—o—

(சங்குசக்கரம் ஏந்திஎன்ற மெட்டு)

பூரணச்சந்திரன்போல் பாரதத்தாயின்முகம்
பொலிவுற் றிலங்கக்கப்பல் போகுதே போகுதே போகுதே
காரிருளாகவெள்ளை யாட்சியாளரின்மூஞ்சி
கலக்கம்கொண்டே மழுங்க லாகுதே ஆகுதே ஆகுதே

* *

வெற்றிவெற்றி யென்றேநம் தாயின்மணித்துவஜம்
விரிந்துமே லாடக்கப்பல் போகுதே போகுதே போகுதே
வற்றியகுளத்துமீன் போல வெள்ளையர் நெஞ்சம்
வதங்கிச்சுருங்கிவர லாகுதே ஆகுதேஆகுதே

சங்குமுழங்கு மெழில் சாகரத்தைக் கிழித்து
தகதக வெனக்கப்பல் போகுதே போகுதே போகுதே
இங்கித மற்றிலங்கும் இங்கிலிஷாருடைய
இதயங்கபகபவென் றாகுதே ஆகுதே ஆகுதே

* * *

ஆழக்கடல்வதியும் வேளா சுறாக்கள்தாமும்
ஆனந்தித்தாடக்கப்பல் போகுதே போகுதே போகுதே
வேலைக்கு வேலைஇங்கு கொம்மட்டிக் காயைப் போல
வெள்ளையர் நெஞ்சங்கசப் பாகுதே ஆகுதே ஆகுதே

* *

கட்டுப்பாடாக்கச்சானில் கடல்எழும்கொந்தளிப்பில்
கம்பீர மாகக் கப்பல் போகுதே போகுதே போகுதே
அட்டைபோல் ஒட்டிஇங்கு ஆளும்அந்நியராட்சி
அழியுங்காலம் உதய மாகுதே ஆகுதே ஆகுதே

## கப்பல் கட்டணம்

(அந்தக் கணபதிக்கு என்றமெட்டு)

வள்ளல் சிதம்பரனார் வகுத்த சுதேசிக்கப்பல்
வாணிபம் ஊதியத்தோ டோங்கி ஓங்கி
வளர்பிறை போல்வளர்ந்து வந்தது நாளுக்குநாள்
மக்களின் அபிமானம் தாங்கி தாங்கி

கொள்ளை யடித்துப்பெருங் கும்பி வளர்க்கும்வெள்ளைக்-
கும்பல்செய் கப்பல்தொழில்மங்கி மங்கி
குறையுஞ்சந் திரன்போல நலிவுறலானதினால்
கொண்டனர்வஞ்சம் உள்ளம்பொங்கி பொங்கி

வளருஞ் சுதேசிக் கப்பல் வாணிபந் தன்னையிங்கு
மட்டந் தட்டிடுவதற் கெண்ணி எண்ணி
வஞ்சக ரானவெள்ளை வர்க்கத்தார் ஒன்றுசேர்ந்து
வம்புகள்செய்தார் சூழ்ச்சி பண்ணி பண்ணி

ஏற்று மதிச்சரக்கிற் கேற்பட்ட கட்டணத்தை
இறக்கினர் நான்கினில் ஒன்றாக ஆக
எடுக்கும்ஐம்பத்தாறணா டிக்கட்டை நான்கணாவென்
றியம்பினாரையா வஞ்ச மாக ஆக

காரியம் சாதகமாய்க் கைகூட வில்லையென்று
கம்பேனி வெள்ளையர்கள் கண்டு கண்டு
கட்டணம் இல்லையெங்கள் கப்பலில் வாங்கவென்றார்
கபடுமனதிலவர் கொண்டு கொண்டு

அண்டிப் போவா ரில்லாது ஆங்கிலக் கப்பலது
ஆழியிற் கிடக்குது வாடி வாடி
ஆர்வமோ டிந்தியர்சு தேசியக் கப்பலையே
ஆதரித்தார்க ளொன்று கூடி கூடி

ஏந்தல் சிதம்பரனை ஏய்த்துப் போடலாமென்று
எண்ணிவெள்ளையர் ஒன்று பட்டு பட்டு
இலட்சம் ரூபாயதனை எடுத்துக்கொண் டேயவர்முன்
ஏந்தினீர்கள் மண்டி யிட்டு இட்டு

## வசனம்

சிதம்பரனார் பரிகசித்து வெள்ளையரைப்பார்த்து

*

## பாட்டு

இலட்சம் ரூபாயதனை இலஞ்சமதாகக்கொண்டு
ஏந்துகின்றீர்கள் புத்திகெட்டு கெட்டு
இலட்சியம் பெரிதென எண்ணுவோர் நாங்களையா
எடுத்துச் செல்வீர்களிடம் விட்டு விட்டு

## வசனம்

என்றுசொல்லி

## பாட்டு

"கோடாத கோடிகொடுத் தாலுந்தன் நாக்கோடாமை
கோடி"யென்பதுணர்ந்த சிங்கம் சிங்கம்
கூறிய மொழிகேட்டு குன்றித்தலைகவிழ்ந்து
கொம்பேனியா ரடைந்தார் பங்கம் பங்கம்

## வசனம்

இலாபத் தோடியங்கிய சுதேசிக்கப்பல்
வாணிபத்தை நசுக்கிவிடவேண்டும் என்று
வஞ்சகமாய் வெள்ளையர்கள் ஒன்றுகூடி
பகீரத முயற்சிசெய்தார் அந்தவேளை

# கோரல் மில்வேலை நிறுத்தம்

## கும்மி

தூத்துக்குடிக் கோரல் மில்லதிலே நித்தம்
சோதரராம் தொழி லாளருமே
வேர்த்துக் களைத்துடல் குன்றிடச் செய்திடும்
வேலைக்குத் தகுந்த கூலியில்லை

காலைப் பொழுதிருந் தந்திவரையிலும்
கஷ்டப்பட்டுத் தொழில் செய்திடினும்
கூழு சமைத்தரைக் கும்பி நிரப்பவும்
கொள்ளும் கூலிப்பணம் போதவில்லை

மேனி வருத்தம் என்றாலும் ஒருதினம்
வீட்டி லிருக்க நினைக்காது
வேலைக்குப் போனாலும் பட்டினி யாலந்தோ
வேதனை மெத்த வடைந்தார்கள்

தாங்க வொண்ணாப்பசி யாலே குழந்தைகள்
தாயை யணைத்துப் பிடித்தழுதார்
மாங்கனிக் கன்னங்கள் வாடி வதங்கியே
மாதர் கணவரைப் பார்த்தழுதார்

மில்லுக் கதிப ரிடமே இயங்கு
மிக்க மரியாதை யாய்வணங்கி
அல்லலைப் போக்கும்படி தொழிலாளரும்
ஆவல் ததும்பிட வேண்ட லுற்றார்

*

செய்யுந்தொழிலுக்கு நீங்கள் தரும்பணம்
சிக்கன மாகச் செலவிடினும்
ஐயா அரைவயிற் றுப்பசி போக்கக்கூழ்
ஆக்கிப் புசிக்கவுங் கூடுதில்லை

வெண்ணெய்பால் முட்டை இறைச்சி வகையொடு
விஸ்கி பிராந்திக்குக் கேட்க வில்லை
பெண்டு பிள்ளையுடன் ஒன்றாய் அரைவயி
றுண்டிடக் கஞ்சிக் குதவுங்கையா

*        *

இந்தவிதந் தொழிலாளரிதமோ
டியம்பிட வேயந்த மில் அதிபர்
சிந்தை கறுத்திரு கண்கள் சிவந்துமெய்
செந்தண லாக விளங்க லுற்றார்

சிக்கன மாகில் எமக்கென்ன நீங்கள்போய்ச்
செத்து மடிந்தால் எமக்கென்னகாண்
தக்க படிகூலி தந்தோம் இனியரைத்
தம்படியும்இல்லை யென்றுரைத்தார்

இல்லை யெனச்சொன்ன மில்லுக்கதிபரை
ஏழைத் தொழிலாளர் மேலும் மேலும்
இல்லை யென்றாது இரங்கும் படியாக
எத்தனையோ முறை வேண்டலுற்றார்

*

கேட்டுங் கேட்டுங்கிடைக் காததி னலந்தப்
பாட்டாளி மக்கள் ஒருமுகமாய்க்
கூட்டுத் தேனீக்கள் போலொன்று பட்டார் தங்கள்
கோரிக்கை நற்பயன் கிட்டிடவே

வேலை நிறுத்தமே செய்துவிட் டார்நகர்
வீதிகள்தோறும் முழக்கமிட்டார்
ஆலையுஞ் சோலையும் ஆழிக் கரையுஞ்சென்
றூர்ப்பாட்டக் கூட்டங்கள் போட்டுவிட்டார்

## வசனம்

வாட்டத்தைப் போக்கத் தொழில் நிறுத்தம் செய்த

# பாட்டு

தன்னன்ன தன்னன்ன தன்ன னன்னே
தன்ன னன்னே—தன்ன
தன்னன்ன தன்னன்ன தன்னனன்னே
தன்னனன்னே

பாட்டாளி மக்கள் உரிமைக்குரல்
உரிமைக்குரல்—எங்கும்
காட்டுத் தீபோல பரவுதையா
பரவுதையா

வேலைநிறுத்தம்—மதுரையிலே
மதுரையிலே—பஞ்சு
ஆலையைத் தொத்திப் பிடித்ததையா
பிடித்ததையா

ஆழி முழங்குது அலைவரைக்கும்
அலைவரைக்கும்—மக்கள்
ஆர்வம் முழங்குது புவிமுழுதும்
புவிமுழுதும்

•

நாளும் பொழுதும் கழியுதையா
கழியுதையா—மக்கள்
நாட்டத்தில் ஊக்கம் வளருதையா
வளருதையா

வீதிகள் தோறும் திரண்டுவந்தார்
திரண்டுவந்தார்—வந்தே
மாதரம் என்றே முழக்கமிட்டார்
முழக்கமிட்டார்

மத்தடிபட்ட தயிர்துபோல்
தயிரதுபோல்—வெள்ளை
வர்க்கத்தார் உள்ளம் கலங்குதையா
கலங்குதையா
*

ஆழிமுளைத்த சிலையதுபோல்
சிலையதுபோல்—அசை
யாது இருக்கின்றார் மில்அதிபர்
மில்அதிபர்.
*

பட்டினியால் மக்கள் வாடுகின்றார்
வாடுகின்றார்—உயிர்
விட்டிடினும் விடோம் உரிமையென்றார்
உரிமையென்றார்.
*

## வசனம்

உழைப்பிற்குத் தகுந்த கூலிவேண்டும் என்று ஒன்றுபட்டுத் தொழில் நிறுத்தம் செய்த ஏழைப் பாட்டாளி மக்கள் படுந் துயரங்கண்டு

*

## பாடல்

—o—

### ஆனந்தக்களிப்பு

செந்தமிழ் நாட்டுத் திலகர்—எனச்
செப்பிடும்வீரச் சிதம்பரச்செம்மல்
சொந்தநாட்டுத் தொழிலாளர்—படுந்
துன்பத்தைக் கண்டதைப்போக்கத் துணிந்தான்.

*

வெற்றிகிட்டும் வரைநின்று—செய்யும்
வேலைநிறுத்தம் விடோம்விடோமென்று
சொற்றும் மக்களுடன் சேர்ந்து—அங்கு
தோன்றினன்தாங்குங் கொடிக்கொம்புபோன்று. (செந்)

பட்டினியாகக் கிடந்து—வயி
றொட்டிய பாட்டாளி மக்கட்குவந்து
வட்டியாற் சாதங்கொணர்ந்து—உண்ண
வைத்தான் கறிதயிர் கூட்டுக்கலந்து (செந்)

ஆர்வங்கொண் டன்பர்அடுத்து—பணம்
ஆயிரமாயிர மாகப்பிரித்து
சோர்வுற்ற மக்கட்களித்து—அன்னோர்
துன்பங் களைந்தான் சுடர்மணிமுத்து

ஆயிரம் பேருக்குத் தானே—வேலை
ஆங்காங்கு தேடிக்கொடுத்து விட்டானே
ஆவனமேலும் செய்தானே—உயர்
ஆதவன்போலத் திகழும்பெம்மானே

*

கூட்டங்கள் ஆங்காங்கு கூட்டி—ஏழைப்
பாட்டாளிமக்கள் துயர்சுட்டிக்காட்டி
ஓட்டும்படிக்குச் சொல்சுட்டி—கொண்டு
ஊக்கமாய்த்தாக்கினன் உயரன்புமீட்டி (செந்)

* *

வீரப் பணிகள் புரிந்து—நலம்
மீட்டுஞ்சிதம்பரன் சேவையறிந்து
மில்லுக் கதிபர் பயந்து—மக்கள்
சொல்லும்உரிமைக் கிசைந்தார்பணிந்து.

## வசனம்

கோரல்மில் தொழிலாளர் உரிமையீட்டிக்
கொடுத்திட்ட சிதம்பரனர் செய்துவந்த
வீரமிக்க சொற்பொழிவால் பாரதத்தாய்
வேற்றவருக் கடிமையென்று விளங்காவாறு
பூரணச் சுதந்திரமாய் வாழவைக்கப்
பொங்கிமக்கள் எழுவதைக்கண் டடக்கியாள..

## வெள்ளையர் துடிப்பு

இந்திரசித்து வில்லுப்பாட்டு ("மனம் நொந்து துடித்தானே இந்திரசித்து" என்றமெட்டு)

*மனம்வெம்பித் துடித்தானே—இங்கிலிஸ்காரன்*
*மனம்வெம்பித் துடித்தானே*

*தே சத்தின் பாற் கொண்ட*
*பா சத்தி னு லேசந்*
*தோ ஷத்து டன் சேர்ந்த*
*வா சத்த லத் தையும்*
*ஆ சித்த சொத் துச்சு*
*கந் தொழில் யர் வையுந்*
*தூ சியாய் மதித் திட்ட*
*சிதம் பர னைக் கண்டு (மனம்)*

*வந் தேமா தர மென்று*
*கோ ஷங்கள் போட் டதும்*
*மக் களி டம் தேச*
*பக் தியை வளர்த் ததும்*
*வார் கடல் மேற் கப்பல்*
*வா ணிபம் செய் ததும்*
*மா செனப் பே சித்து*
*வே ஷம்செஞ் சங் கொண்டு (மனம்)*

*துண்டு துண்டாய்ச் சதை*
*துண்டிக்கப் பட்டாலும்*
*துப்பாக்கிப் படை சூழ்ந்து*
*சுட்டுத் துளைத் தாலும்*
*கொண்டு போய் அக்கினிக்*
*குழம்பிற்குள் போட்டாலும்*
*கொள்கை விடேம் என்ற*
*வள்ளலைக் கண்டதும் (மனம்)*

பொது நிலங்களில் கூட்டம்
போடக் கூடா தென்று
போலிஸ் படை யுடன்
பிரேக்கன் என்பவன் வந்து
விதித்த கட்டளை மீறி
விரிவாகப் பேசிய
சிதம்பரத் தோடுசி
வாவையுங் கண்டங்கு (மனம்)

*    *    *

மந்திர நகர் தன்னில்
வெள்ளையர் கூடியே
வஞ்சக மாய்ச் சதித்
திட்டங்கள் தீட்டியே
வள்ளல் சிதம்பரத்
தோடு சிவாவுமே
வதைபட்டுத் துயருறும்
படிகொண்டு சிறைதள்ள (மனம்)

*    *    *

## வசனம்

வேல்பிடித்துச் சிவந்தமறத் தமிழர் கைகள்
வெள்ளையர்கள் கொண்டமனப் பயத்தினுலே
கோல்பிடிக்கக் காண்பதுவுங் கூடா தென்று
கொடியசட்ட மியற்றி யங்தோ பறிக்கலுற்ற
தென்னுட்டில் பாரதத்தாய் விடுதலைக்காய்
சிதம்பரனுர் உழைத்துவரும் சமயந் தன்னில்

*    *

## விபின சந்திரபாலர் விடுதலை

நொண்டிச்சிந்து

அரவிந்தர் எனநவிலும்—அந்த
அண்ணலுக் கெதிரிக ளபாண்ட மாகவே
அமைத்திட்ட சதிவழக்கில்—வெள்ளை
ஆட்சியினர்க் காதரவாய் சாட்சியம் சொல்ல
மறுத்துரை பகர்ந்ததினுல்—ஆட்சி
மன்றத்தை யவமதித்தா னென்றெருகுற்றம்

சாட்டியே சிறைப்படுத்தி—கொடுந்
தண்டனை யிட்டுபல சங்கடஞ்செய்ய
அஞ்சிடா மனஉறுதி—கொண்டு
அத்தனையுந் தாங்கிநின்ற வித்தகச்சிங்கம்
விபினசந் திரபாலர் – சிறை
விட்டுவெளி வரும்விடு தலைத் தினத்தில்
அதிவிம ரிசை யுடனே—மக்கள்
அனைவரும் மகிழ்ந்துகொண் டாடிடவே
ஒழுங்குகள் செய்யலுற்றார் – எங்கும்
ஊர்வலங்க ளாகவந்து கூட்டங்கள்கூட்டி
சுதந்திரம் (எங்கள்) பிறப்புரிமை—என்ற
சொல்நயத்தோடுள்ளம் எழும் உணர்ச்சிபொங்க
முழக்கமே செய்யலுற்றார்—வெள்ளை
முதலாளிவர்க்கம் அஞ்சிநடுங்கலுற்றார்

•

## வசனம்

—o—

### சிறைவாசம்

அந்நியரின் ஆட்சி தன்னை முறியடிக்க
அஞ்சாத நெஞ்சமொடு உழைத்து வந்த
தென்னாட்டுச் சிறந்த பெருந்தியாகியான
சிதம்பரனாரைத் தூத்துக்குடியில் வைத்து
கைது செய்தால் மக்கள் திரண்டாவேசத்தால்
கலகம் செய்வார் என எண்ணி கலெக்டர் என்பான்
நேரிலே தன்னைவந்து காணும் வண்ணம்
நெல்வேலி வரச்சொல்லி ஆங்கு வைத்து
ஆயிரத்துத்தொளாயிரத்து எட்டாம் ஆண்டு
ஆன மார்ச் மாதம் பன்னிரண்டாம் தேதி
கைதுசெய்து சிறைச்சாலைக் கனுப்பலானான்
கயவர்களுக்கமைத்த சிறைக்குள்ளே அண்ணல்
கல்லுடைத்தார் கயிறுக்கும் யந்திரத்தைக்
கைபழுக்கச் சுழற்றலுற்றார் அத்தோட்டந்தோ

# செக்கிழுத்தல்

—— ௩ ——

(நெல்லுக் குத்த பெண் பிறந்தேன் என்றமெட்டு)

செக்கிழுக்க லானுரையா
சிறைதனி லந்தோ
செந்தமிழ் வீரச்
சிதம்பரய பிள்ளை

*　　*

தேசத் தின்பால் வாஞ்சையன்றி
சிறுபிழை யேனும்
செய் தறியாத
சிதம் பரம் பிள்ளை

வஞ்சகஞ் சூழ் நெஞ்சினராய்ப்
படுகொலை புரிந்த
கொடியவர்க் குகந்த
சிறைதனில் படிந்த (செக்)

*

சத்தியஞ்சேர் பொக்கிஷத்தை
தக்கவர் கூடும்
சபைதனில் தாங்கும்
தளிர் கரத்தாலே (செக்)

உச்சி வெயில் வேளையிலே
உடல் கனலேற
கழல் தடுமாற
கைகளுஞ்சோர

இந்தியத் தாய் மீட்சிபெற
இருகரங் கன்னி
ஒழுகிய செந்நீர்
வியர்வையா யோட

உப்பறியாக் கூழ் குடித்து
உடல் நல மின்றி
திடமது குன்றி
திருவிழி சுண்டி

*

யானை கட்டிப் போர்அடித்தோர்
எனும்புகழ் படைத்த
தமிழினம் உதித்த
சிதம்பரன் கனத்த (செக்)

*

கப்பல் நாலோ டிந்தியாவில்
வந்துபுகுந்த
வம்பர் புரிந்த
வஞ்சகத் தாலே

*

## அடக்கு முறை

(ராசாதேசிங்கு மெட்டு)

தேச பக்தர் சிதம்பரம் பிள்ளை
சிறைபட் டார் என்ற
சேதி மின்னல் வேகம் போலே
பரவிட லாச்சுதையா
செந்தமிழ் நாட்டு மக்களொன்ருகச்
சேர்ந்தே திரண்டு விட்டார்
திருநெல் வேலியும் தூத்துக் குடியும்
போர்க்கள மாக்கி விட்டார்
வர்த்தக ரெல்லாம் கடைகளை யடைத்துக்
கறுப்புக் கொடிபோட்டார்
வங்காளம் போலே தேசபக் தர்கள்
வந்து குவிய லானர்
அமைதியாக அனைவரும் கூடித்
திருநெல் வேலியிலே
ஆள்வோர் செய்த அடாத செயலை
அம்பலப் படுத்த லுற்ருர்

அந்தச் சமயம் ஆள்வோர் இடம்பொருள்
அக்கினி மயமாக
ஆவதை யறிந்து போலிஸ்படையுடன்
வந்தான் ஆஷ் என்போன்
இரக்கம் அறியா இதயம் படைத்த
முரட்டு ஆஷ் என்போன்
இடுப்பில் இருந்த கைத் துப்பாக்கி
எடுத்தான் ஆஷ் என்போன்
பட படவென்றே வெடிகள் கிளம்பச்
சுட்டான் ஆஷ் என்போன்
திடு திடுவென்றே செத்துவிழுந்தனர்
செந்தமிழ் நாட்டுமக்கள்
படீர் படீர்என்றே தடிகொண் டடித்தான்
பதறிய ஆஷ் என்போன்
தடார் தடார் என்றே தரையில்விழுந்தனர்
தமிழ்ப்பெருங் குடிமக்கள்
குதிரைகள்கொண்டு பலரைமிதித்துத்
துவைத்தான் ஆஷ் என்போன்
சுருண்டு சுருண்டு விழுந்தாரையா
தொல்குடித் தமிழ்மக்கள்
சிவப்புக் கம்பளம் விரித்ததுபோலச்
செந்நீர் ஓடுதையா
சிதறிய ரத்தம் செம்பருத்தியின்
பூப் போல் தோன்றுதையா
கொட்டிய ரத்தம் சப்பித் துப்பிய
தம்பலக் கட்டியைப் போல்
தரையில் உறைந்து ஈயும்எறும்பும்
நுகர்ந்திட லாச்சுதையா
அடக்கிக்கொள்ள முடியாதென்றே
அறிந்தான் ஆஷ் என்போன்
அடுத்தகணமே சென்னையில்இருந்து
அழைத்தான்பட்டாளம்
பாராப் போட்டான் பாமரமக்கள்
பயப்படும் படியாக
பலவித மாகக் கொடுமைகள் செய்தான்
பாதகன் ஆஷ் என்போன்.

## வ ச ன ம்

இருள்படிந்த சிறைதனிலே நமது அண்ணல்
இருந்து துயர் அனுபவிக்கும் வேளை தன்னில்

* * *

## ஆஷ் மரணம்

———o———

(எங்கள் மகுடாதிபன் என்றமெட்டு)

மிஞ்சிய வஞ்சகன் ஆஷ்
வெறி மேவி யேபுரிந்த—மிக
மோச மாகிய நாச வேலையால்
தேச மக்கள் வெறுப்பினுக் குள்ளானன் (மிஞ்)

* * *

சுட்டுக் குவித்திட்ட ஆஷ்
சுகமே பெறுவதற்காய்—துணை
யாளொடு குளிர் மேவிடுங் கொடைக்
கானலுக் கவன் கோச்சிற் புறப்பட்டான் (மிஞ்)

* *

செந்தமிழ் நாட்டிளைஞன் ÷
திடமோடு ஆங்குடனே—சினம்
மீறியே மனஞ் சீறியே மறை
வாக ஆஷ்அறி யாமல் வரலானன் (மிஞ்)

* *

வந்த தையா ரெயிலும்
மணியாச்சி ஜங்ஷனிலே—வடு
போக்கிட மனத் தீர்க்க மோடுகைத்
தோக்கினுலே சுட ஆஷ் தொலைந்திட்டான் (மிஞ்

* *

வெற்றிக் கறி குறியாய்
தமிழ் வீரத் தாய்ப்புதல்வன்—மிடுக்
காகத்தன்னைத்தா னுகச் சுட்டுயிர்
மாய்த்துக் கொண்டுவிண் ணேகிடலாகினன் (மிஞ்)

* * *

---

வாஞ்சிநாத ஐயர்

## வசனம்

சிதம்பரனார் கோயமுத்தூர் கண்ணனூர்
சிறைகளிலே இருக்கும்போ திடை நேரத்தில்
தேனொத்த செவ்வியசெந் தமிழ்மொழியால்
பல நூல்கள் எழுதலானார்
ஜேம்ஸ் ஆலன் எழுதிய ஆங்கில நூல்கள்
மொழி பெயர்த்தார் அத்தோ டங்கு
சேர்ந்திருந்த கைதிகளுக் கார்வமுடன்
தமிழ் கற்றுக் கொடுத்து அன்னார்
சிந்தையிலே தாய்நாட்டுப் பற்றுதனைத்
தினந்தோறும் ஊட்டிவந்தார்
இந்தவிதம் சிறைகளிலே காலத்தைக்
கழித்துக்கொண் டிருக்கும் போது
ஆயிரத்துத் தொளாயிரத்துப் பன்னிரண்டாம்
வருடமதில் டிசம்பர் மாதம்

## விடுதலை

தந் தினதா தந் தினதா
தந் தினதா தந் தினதா
தன தன தன தன தானா தானா

தெண்டிரை சூழ் மண்டலத்தில்
எண்டிசையும் பேர் விளங்கும்
சிதம்பரன் விடுதலை யானார் ஆனார்
தண்டமிழர் கொண்ட தவத்
தொண்ட தனாற் கண்டதிருச்
சிதம்பரன் விடுதலை யானார் ஆனார்

தெள்ளிய தமி ழமுதை
அள்ளியள்ளிப் பருகிடும்
சிதம்பரன் விடுதலை யானார் ஆனார்
செந்தில் வடி வேலவரை
சிந்தையில் வைத்தே வணங்கும்
சிதம்பரன் விடுதலை யானார் ஆனார்

* *

பாறையைப் பிளக்கும் உளி
போலத்திட வீறுகொண்ட
சிதம்பரன் விடுதலை யானார் ஆனார்
பேர்படைத்த பாரதத்தைச்
சீர்படுத்தப் போர் தொடுத்த
சிதம்பரன் விடுதலை யானார் ஆனார்

* * *

## வறுமை

(மஞ்சுநிகர் குந்தளம் என்றமெட்டு)

மாறுபாடில் லாக் குணத்தங்கம்
வாரிவழங்கும் வாஞ்சை விளங்கும்
வள்ளல்வீரச் செந்தமிழ்ச் சிங்கம்—முனம்
மன்னவன்எனத் தென்னகத்தவர்
சொன்ன அண்ணல் சிதம்பரன்சிறை
ஏகி வெளி யாகி டும்போது
அவா மிகுத்து ÷ சிவா தனித்து
சென்றணைத்தார் சேவைநினைத்து (மாறு)

* * *

ஆழிக்கப்பல் வாணிபங்கெட்டு
தேசத்துப்பற்று சிதைந்த திட்டு
ஆற்றொணுவிதங் கண்ணீர்விட்டு—அழு
தாண்டவா இதற் காகவா உடல்
ஆவியர்ப்பணம் செய்துள்ளேன்எனக்
கோழை பட்ட மக்கள் நினைத்து
அஞ்சும்வீதத்து நெஞ்சம்பதைத்துக்
கூறினார் சிதம்பரமுத்து (மாறு)

* * *

சுப்பிரமணியசிவா

வாஞ்சைமிக்க தோழனைப் போலே
வறுமைவந்து குடிபுகுந்து
வாட்டுந் துன்பத் தால்மிகநொந்து—மனச்
சோர்வுடன் கடை வீதியின்வழிப்
பாதையிற் சிறு வாணிபம் என
நெய் அரிசி கொள்முதல் பண்ணி
விற்பனை செய்தார் வியந்துதக்கார்
மெச்சிடும் தியாகமே மிக்கார் (மாறு)

நாட்டடிமை போக்குவதற்காய்
நாளும் மிகுந்த சேவைபுரிந்த
வள்ளல் வாழ்க்கைத் துன்பம்அறிந்த—நம
தரியபெருமகன் திலகர் முதல்முதல்
உரிமையொடுபொரு ளுதவிகொடுத்திட
ஆப்பிரிக்கா தேசத்தில்காந்தி
மகான்கையேந்தி பணமாய்வாங்கி
அனுப்பினர் சிதம்பரன்நோக்கி (மாறு)

## தேசப்பணியில் ஈடுபடல்

(நாதர் முடிமேலிருக்கும் என்றமெட்டு)

ஆலைவாய்க் கரும்பதுபோல் சிதம்பரனார்—பட்ட
அல்லல்சுடர் கண்டபனி போலவிலக
சோலைக்கிளி போல்பறந்து வெளிக்கிளம்பி—நாடு
சுற்றிச்சுற்றித் தேசத்திற்காய்த் தொண்டுகள்செய்தார்

*

அங்கங்கு சங்கங்களைத் திறந்துமேவைத்தார்—வெள்ளை
ஆட்சியின் முடிவைக்காண மேலும்விழைந்தார்
பொங்கிவரும் காவேரிபோல் முழக்கமிட்டார்—அன்னை
பூரணசுதந்திரமாய் வாழ நினைத்தார்

# பிணிவாய்ப்படல்

## வ ச ன ம்

இப்படியாகச் செந்தமிழ் நாட்டின் வீரத்தளபதியாக நின்று பாரதத்தாயின் விடுதலைக்காகச் சிதம்பரனுர் அல்லும் பகலும் அயராது உழைத்தார். அதனுல் மிகவே களைத்தார். வரவர தேகம் இளைத்தார். இளைத்துக்களைத்து வியாதியாகப் படுத்தார். வைத்தியர் அடுத்தார்; மருந்துகள் கொடுத்தார். சுகப்படுத்திவிடலாமென முயற்சிகள் எடுத்தார். பலன்கிட்டாதெனப் பதறிய வண்ணம் உரைத்தார். மாந்தர் கேட்டுத் துயர்தாங்காமல் கண்ணீர் உகுத்தார். மனைவி மக்கள் உற்ருர் உறவினர் அருகே சூழ்ந்து நின்று அழுது புலம்பித்தவித்தார். இறுதியாக பாரதநாடு எப்படியும் சுதந்திரம் அடைவது திண்ணம் திண்ணம் என்று கூறியவண்ணம் அமைதியாக ஆயிரத்துத்தொளாயிரத்து முப்பத்தாரும் ஆண்டு நவம்பர் மாதம் பதினெட்டாந்தேதி தூத்துக்குடியில் அந்தோ!

* *

## ம றை ற வு

(போகாதே போகாதே என் கணவா மெட்டு)

மக்களுக் குள்ளொரு மாணிக்கமாம்
வள்ளல் சிதம்பரம்--பிள்ளையவர்—ஐயா
திக்கெங்கும் சோகத்தில் ஆழ்ந்துநின்றே
தேம்பியழும்படி யாய்மறைந்தார்—ஐயா

பாரதத்தாயின் விடுதலைக்காய்ப்
பைந்தமிழ்நாட்டுத் தளபதியாய்—ஐயா
ஆர்வத் துடன்நின்று போர்தொடுத்த
அண்ணல் சிதம்பரன் விண்மறைந்தார்—ஐயா

* *

கத்திவா ளீட்டி யெதுவுமின்றி
கம்பேனி வெள்ளைய ரோடெதிர்த்து—ஐயா
சத்தியந்தாங்கிச் சமர்தொடுத்த
சற்குணச் சிதம்ப ரன்மறைந்தார்—ஐயா

பத்தினி யாள்பாதம் கட்டியழ
பாலர்கள் வதனம் பார்த்தேயழ—ஐயா
பந்துஜனர்சூழ நின்றே யழ
பக்தன் சிதம்பரன் விண்மறைந்தார்—ஐயா

அம்புவி யெங்கும் இருள்படர
அந்தோ நடுச் சாம வேளையிலே—ஐயா
அண்டர் குழாம் கூடிப் பூச்சொரிய
ஐயன் சிதம்பரன் விண்மறைந்தார்

செல்வத்தில் வாழ்ந்த சிதம்பரனார்
தேசாபி மானச் சிதம்பரனார்
அல்லல்கண் டஞ்சாச் சிதம்பரனார்
அம்பரஞ் சேர்ந்தார் சிதம்பரனார்—ஐயா

## மங்களம்

—c—

சுடலை மாடன் வில்லுப்பாட்டு
ஆடுபாம்பே என்றமெட்டு

வாழ்த்து வோமே நிதம்
வாழ்த்து வோமே
மங்களம் பாடிமகிழ்ந்து
வாழ்த்து வோமே

* *

எங்கும் நிறைந் தெய்வுயிரும் இன்புறும்படி
என்றும் நிலையாகப் பரிபாலனம் செய்யும்
துங்கபரன் பங்கயப்பொற் கழல்பணிந்து
மங்களம்பாடி மகிழ்ந்து வாழ்த்து வோமே

பாரினுக் கிருதயம தாக விளங்கி
பல்வளமுந் தன்னகத் துக்குள்ளே யடக்கி
பூரணச் சுதந்திரத் துடனே திகழும்
பாரதத் தேவியை நிதம்வாழ்த்து வோமே (வாழ்)

தருமமென்பதே யசோகச் சக்கரம தாய்
தாங்குஞ் தியாகம் சத்யம் வீரம் மூவர்ணங்களாய்
ஒருமைகொண் டுயர்வெளியில் ஓங்கிப் பறக்கும்
உன்னத மணிக்கொடியை வாழ்த்து வோமே

•

தேசம் அடிமை தவிர்க்க விறுளத் தொடு
தியாக மறுகத் தங்களது ரத்தத்தைச் சிந்தி
மாசின்றிப் பாரதத்தேவி வையம் விளங்க
வைத்த தேச பக்தர்களை வாழ்த்து வோமே

•

சுதந்திரம் சுதந்திரம் எனமுழக்கம் இட்டு
சுந்தரத் தமிழகத்தில் துன்பங்கள் பட்ட
சிதம்பரன் சிதம்பரன் எனப்பகர்ந்தே நிதம்
சிந்தையில் வைத்துப் புகழ்ந்து வாழ்த்து வோமே (வாழ்)

பஞ்சம் பிணி இன்றி மக்கள் கொஞ்சி வாழ்வும்
வஞ்சகம் பொறாமை கர்வம் அஞ்சி யோடவும்
நெஞ்சிற் சமாதானம் சத்யம் நின்று லாவவும்
நித்தமுந் தரணியிசை வாழ்த்து வோமே (வாழ்)

உத்தரவாதமுள்ள தரம் உயர்ந்த நவீன டிசைன்களில் மனதைக்கவரும் தங்க வைர நகைகளுக்கு நம்பிக்கையான இடம்

# பிரகாஷ்

கண்ணைக்கவரும் தங்க நகைகளுக்கு உத்தரவாதமுள்ள அசல் தங்கத்திலல் சிறந்த வேலைப்பாடுகள் கொண்ட

**பிரகாசமான**

ஆபரணங்களைப்பெற இன்றே விஜயம் செய்யுங்கள்

# பிரகாஷ் நகை மாளிகை

**106, செட்டியார் தெரு,**

**கொழும்பு.**

PHONE 5808
EXT. 3 LINES

TELEGRAMS
GOODLUCK

---

நகைகள் அடவுபிடிக்கப்படும்

*For all your*

*requirements in*

- Building Materials
- Estate Supplies & Sanitaryware
- 'GRUNDIG' Radios
- 'MINERVA' Sewing Machines

- 'HANSAYA' G.I. Buckets
- 'SAI' Bolts & Nuts
- 'ANTON' Slotted Angles
- Rigid PVC Pipes & Fittings

*Visit*

**ST. ANTHONY'S HARDWARE STORES LTD.**

**516, Skinners Road South Colombo 10.**

உங்களுக்குத் தேவையான

இரும்புச் சாமான்கள்

மற்றும்

கட்டடத் தளபாடங்கள்

என்றும் எம்மிடம் கிடைக்கும்

கே. என். அப்துல்காதர் ராவுத்தர் அன்
கொம்பனி லிமிட்டெட்

நிர். 312, ஸ்ரீ சங்கராஜமாவத்தை

கொழும்பு 10.

TELEPH
Machinery & Office

# ‘அலன்ஸ்’

தின்பதற்குத் திகட்டாத இனிப்பையும்
நாவிற்கு ருசியும் சுவையும் தருவது
பால், நெய், பழரசம் கலந்து
தயாரிக்கப்படுவது.

அலன்ஸ் டொ(f)பி

அலன்ஸ் பார்லி சுகர்

அலன்ஸ் ஜிஞ்சர் கிரஞ்ச்

அலன்ஸ் பட்டர் ஸ்கொட்ச்

அலன்ஸ் சொக்கலட் கிரஞ்ச்

அலன்ஸ் கோட் புருட்

எங்கும் எப்பொழுதும் ‘அலன்ஸ்’
என்று கேட்டு வாங்குங்கள்.
தின்று இன்பம் அடையுங்கள்.

*தயாரிப்பாளர்கள்:*

**ஏப்ரஹாம் இன்டஸ்றீஸ்**

**கொழும்பு 12.**

**BEADS ARE BACK IN FASHION!**

ADORN YOUR SAREE OUTFIT
WITH QUALITY

**GLASS BEADS AND PEARLS**

*available in exciting range*

*and*

*at competitive prices*

A WIDE RANGE OF HOLLOW
GLASS BEADS SUITABLE FOR
KANDYAN DANCE - COSTUMES
AND
JUG-COVER BEADS IN GORGE-
OUS COLOURS ARE ALWAYS
IN READY STOCK

# M. M. ABDUL HAMEED & BROS.

**41, China Street**
**Colombo.**

Telephone : **5274**
Telegrams **CUTLERY**

சுத்தமான உணவுகள் !

சுவை மிக்க உணவுகள் !

கண்யமான உபசரிப்பு !

உங்கள் மனம் மகிழ

நேரில் ஒருமுறை

விஜயம் செய்யுங்கள்

## BRITANNIA BAKERY & HOTEL

32, HOSPITAL STREET—FORT

Telephone 7752

**ஏன் சிந்திக்கிறீர்கள் ?**

**தேவைப்படுவன எவை ?**

சில்லறைச் சாமான்களா? சாப்புச் சாமான்களா?
மருந்து வகைகளா? பால் உணவுப்பண்டங்களா?
பல் வர்ண தையல் நூல் வகைகளா? வாசனை
திரவியங்களா? பாடசாலை உபகரணங்களா?

குறைந்த விலையில் உயர்ந்த
ரகத்தில் பெற்றுக்கொள்ள
இதோ

## WELIGAMA STORES

No. 3, HUSSEINIYA STREET,
COLOMBO-12

# "ஸ்டார்"

இனிப்பு வகைகளில்
முதன்மை ஸ்தானம் பெற்றது

* மில்க் கரமல்
* சொக்கலேட் டொபீஸ்
* புரூட் டொபீஸ்
* மின்ட் டேபிளட்ஸ்
* லொலி பொப்ஸ்
* பட்டர் ஸ்கொட்ச்
* லெமன் பார்லி
* பார்லி சுகர்

இன்னும் பலவிதமான
ஸ்டார் ஸ்வீட்ஸ் உற்பத்தி செய்யப்படுகின்றன.

## ஸ்டார் டொபிகள்

இலங்கை எங்கிலும் கிடைக்கும்

தயாரிப்பாளர்கள்:

மொடர்ன் கொன்பெக்ஷனரி வொர்க்ஸ்

கொழும்பு 14.

P. O. Box 1100 Phone: 7783

# தினமணி கதிர்

அனைவரும் விரும்பும் வாரப்பத்திரிகை. பிற வாரப் பத்திரிகைகளை விட சுமார் இருமடங்கு விஷயம், பெரிய அளவு, 56 பக்கங்கள், விளம்பரங்கள் இடையா, முற்றிலும் படிக்கும் விஷயங்களே.

✱ ''மாயாவி'' அளிக்கும்
சுவைமிக்க புதிய தொடர்கதை
''நேசம் மறக்கவில்லை நெஞ்சம்''

✱ டி. எஸ். பாலகிருஷ்ண சாஸ்திரி எழுதும்
''பத்ம புராண ஸாரம்''
சுவாரஸ்யமான புராணக் கதைத் தொடர்

✱ ''ராஜி'' எழுதும்
''நான்கு குதிரைகள்''
சிறுவர் தொடர்கதை

இன்னும் புகைப்படக் கட்டுரைகள், கேட்டுப் பாருங்கள் (சினிமா கேள்வி-பதில்) மங்கையர் உலகம், சினிமா நட்சத்திரங்களின் மூவர்ணப் படம் முதலிய மனங்கவரும் பற்பல அம்சங்களுடன் வெளிவரும் வார இதழ்.

# தினமணி கதிர்

சப் ஏஜுண்டுகள் இல்லாத இடங்களுக்கு
சப் ஏஜண்டுகள் தேவை

விபரங்களுக்கு:

## P. S. SUNDARAM

**75, BARBER STREET,**
**COLOMBO 13.** **78549**

## அறிவிப்பு

வில்லிசைக் கச்சேரி நடாத்த விருப்பமுள்ளவர்கள் கீழ்க் கண்ட முகவரிக்குத் தொடர்பு கொள்ளவும்.

**நடிகவேள், லடிஸ் வீரமணி**
**67, கன்னாரத் தெரு,**
**கொழும்பு 13.**

இந்த இடம்

சிறந்த தேசபக்தரான

தென்னாட்டு முஸ்லீம்

நண்பர் ஒருவரின்

அன்பளிப்பு.

XVC: 40